மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 193/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : முத்துமாரி (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

13.06.2023

வாதி தரப்பு சாட்சி 1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

1. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. எனது அப்பா உயிரோடு இருந்த காலகட்டத்தில் அவரோடு சுமூகமான உறவுமுறையில் இருந்தேன். எனது அண்ணன் திருமுருகனிடமும் நல்ல உறவுமுறையில் இருந்தேன். வழக்கு சொத்துக்கள் தவிர வயல்காடுகள், புஞ்சைக் காடுகள் உள்ளன. மேற்படி நிலங்கள் தரிசாக உள்ளது. நான் மதுரையில் 20 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். எனது அப்பாவை நான் பார்க்கவருவேன் எனது அப்பாவும் என்னை பார்க்க வருவார். 2009ம் வருடம் சொத்தை விற்பனை செய்ததாக எனது அப்பா அண்ணன் என்னிடம் சொல்லவில்லை.விற்பனை செய்த பணத்தில் பங்கு தரவில்லை. எனக்கு விற்பனை செய்த விரமும் தெரியாது. எனது அப்பா நிதானம் இல்லாமல் இருந்தார். சொத்தை விற்று விட்டார்கள். விற்பனை பணத்தை எல்லாம் எனது அண்ணன் பெற்றுகொண்டார். நான் என் அண்ணனிடம் பணம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை விற்பனை செய்தது எனக்கு தெரியாது. நான் விவசாயம் செய்தேனா என்றால் திருமணத்திற்கு முன்பு செய்தேன். திருமணத்திற்கு பிறகு விவசாயம் செய்யவில்லை. தாவா சொத்தில் இருளாயி என்பவர் போர் போட்டு விவசாயம் செய்கிறார் என்றால் முதலில் தெரியாது தற்போது சொன்ன பிறகு தெரியும்.

2. விற்பனை விபரம் எனது கணவர் மூலம் தெரியவந்தது. எனது தம்பி இறந்ததினால் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் எனது தம்பியுடன் பங்கு கேட்டேனா என்றால் கேட்கவில்லை. பங்கு கேட்டதற்கு விற்பனை செய்துவிட்டதாக சொன்னார்கள். வேறு சொத்துக்களில் பங்கு ஏன் கேட்கவில்லை என்றால் எனது தம்பி இறந்ததால் பங்கு கேட்கவில்லை. சொத்தை விற்பனை செய்ததால்பாகம் கேட்கிறேன். மற்ற சொத்துக்களில் விற்பனை

செய்யாததால் பாகம் கேட்கவில்லை. தாவா சொத்தில் ஒரு பகுதியில் இருளாயி 2, 4 பிரதிவாதிகளுக்கிடையே பரிவர்த்தனை செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியும். 4ம் பிரதிவாதி அனுபவத்தில் தாவா சொத்து உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். அதற்கான பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோனா என்றால் பரிகாரம் கேட்டுள்ளேன்.

3. இருளாயி எனது உறவினர் கிடையாது. ஆனால் இருளாயி விவசாயம் செய்து வந்தது எனக்கு தெரியும். தாவா சொத்தில் இன்னொரு பகுதியை முத்தையா மகன் கருப்பசாமிக்கு 2ம் பிரதிவாதி பரிவர்த்தனை செய்த விபரம் எனக்கு தெரியும். கருப்பசாமியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. கருப்பசாமி எனது உறவினர் கிடையாது . கருப்பசாமி விவசாயம் செய்து வருகிறார். 2ம் பிரதிவாதியிடம் இருந்து பணத்தை பறிப்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விற்பனை செய்த காலத்திலேயே எனக்கு விபரங்கள் தெரியும் என்றால் சரியல்ல. சொத்தின் மதிப்பு கூடிவிட்டதால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனதுஅண்ணன் , தகப்பனார் உயிரோடு இருந்த காலகட்டத்தில் அவர்கள் வீட்டுக்கு வருவேன். அவர்கள் வீட்டில் தங்கி விவசாயப் பகுதியை பார்த்து வருவேன் என்றால் சரிதான். நானும் 1ம் பிரதிவாதியும் கூட்டு சதி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

1. எனக்கு வயது 40. 1ம் பிரதிவாதி எனக்கு தம்பி. இறக்கும் போது அவருக்கு வயது 32. என் தம்பிக்கு திருமணம் நடந்தபோது வயது என்ன என்று எனக்கு தெரியாது. என் தம்பிக்கு 2 குழந்தைகள்.தம்பி குழந்தைகளுக்கு 10, 20 வயது ஆகிறது. எனதுநீருபண வாக்குமூலத்தில் 6,7 பிரதிவாதிகளின் தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பாகத்தை மட்டும் கிரையம் கொடுத்துள்ளார் என்றும், அந்த கிரையம் வாதிகளை கட்டுப்படுத்தும் என்று எதிர்வழக்குரை சொன்னதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எதிர்வழக்குரையில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு பாகம் இருப்பதைபோல் 1ம் பிரதிவாதியின் குழந்தைகளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிரையப்பத்திரம் 6, 7 இளவர் பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.